முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 25-07-2024

# பழிவாங்கவே பட்ஜெட்

‘உள்ளம் இருக்கிறதா? உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் பள்ளம் இருக்கிறதா?’ என்பது தமிழினத் தலைவர் கலைஞரின் வரிகள். பிரதமர் மோடியைப் பார்த்து, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனைப் பார்த்து கேட்க வேண்டிய கேள்வி இதுதான்! “உயர்ந்த பதவியில் இருக்கும் உங்களுக்கு உள்ளம் இருக்கிறதா? உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் பள்ளம் இருக்கிறதா?”

**முன்னேற்றத்துக்காக பட்ஜெட் போடுவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் பழிவாங்குவதற்காக பட்ஜெட் போடுவதை இப்போதுதான் பார்க்கிறோம். நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ள பட்ஜெட் என்பது பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காத மக்களைப் பழிவாங்குவதற்காக போடப்பட்ட பட்ஜெட். இந்திய நாட்டு மக்கள் மீது தொடுக்கப்பட்ட நிதித்தாக்குதல் இது. பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காத மாநிலங்கள் மீது தொடுக்கப்பட்ட போர் இது!**

முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், ‘மைனாரிட்டி பா.ஜ.க.வை மெஜாரிட்டி ஆக்கிய சில மாநிலங்களுக்கு மட்டுமே’ சில திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. “அறிவித்துள்ளார்களே தவிர, அதையும் நிறைவேற்றுவார்களா என்பதும் சந்தேகம்தான். தமிழ்நாட்டுக்கு மெட்ரோ ரயில் என்று அறிவித்துவிட்டு நிதி ஒதுக்காமல் ஏமாற்றி வருவதைப் போல எதிர்காலத்தில் அந்த மாநிலங்களுக்கும் நடக்காது என்பதற்கு உத்தரவாதம் இல்லை” என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதுதான் உண்மையில் நடக்கப் போகிறது.

பா.ஜ.க.வுக்கு ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை இல்லை. 240 இடங்களை வைத்து ஆட்சியை அமைக்க முடியாது. ஆந்திராவின் சந்திரபாபு நாயுடு, பீகாரின் நிதிஷ் குமார் தயவில்தான் பிரதமர் நாற்காலியில் மோடி உட்கார்ந்து இருக்கிறார். நாற்காலியின் இரண்டு கால்களை அவர்கள் உடைத்துக் கொண்டு போனால் ஆட்சி கவிழ்ந்து விடும். எனவே, அவர்கள் இருவரையும் திருப்திப்படுத்தினால் போதும் என்று மோடி நினைக்கிறார்.

ஆந்திர தலைநகர் அமராவதி மேம்பாட்டுக்கு ரூ.15 ஆயிரம் கோடி. பீகாரில் நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு ரூ.26 ஆயிரம் கோடி, பீகார் வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ரூ.11,500 கோடி ஒதுக்கினால் போதும் என்று முடிவெடுத்து விட்டார்கள். அப்படியானால் இது ஆந்திர மாநில பட்ஜெட், பீகார் மாநில பட்ஜெட் ஆகத்தான் இருக்க முடியுமே தவிர, ஒட்டு மொத்த இந்தியாவுக்கான பட்ஜெட்டாக எப்படி இருக்க முடியும்?

**ஆந்திராவின் பெயர் ஐந்து இடங்களில் வருகிறது. பீகாரின் பெயர் ஐந்து இடங்களில் இருக்கிறது. மேற்கு வங்கம் ஒரு இடத்தில் வருகிறது. நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற பெயரே இல்லை. கேரளா இல்லை. கர்நாடகா இல்லை. பஞ்சாப் இல்லை. டெல்லி இல்லை. மணிப்பூர் இல்லவே இல்லை. ஏன்? அவர்களது கோட்டையாக நினைத்த உ.பி.யே அகிலேஷூக்கு ஜே போடத் தொடங்கியதும் உ.பி.பேரும் இல்லை. அகிலேஷூக்காக புறக்கணித்தார்களா, யோகிக்காக புறக்கணித்தார்களா என்பது மோடிக்குத்தான் தெரியும். அப்படியானால் இதனை ஒட்டு மொத்த இந்தியாவுக்கான பட்ஜெட்டாக எப்படிச் சொல்ல முடியும்?**

பா.ஜ.க. ஆட்சி யாரால் நீடிக்கிறது என்று தேர்தல் முடிவுகளைப் பார்த்து தயாரிக்கப்பட்டது இந்த பட்ஜெட். பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காத மாநிலங்கள் எவை என தேர்தல் முடிவுகளைப் பார்த்து தயாரிக்கப்பட்டது இந்த பட்ஜெட். பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காதவர்களை பழிவாங்கவே இதனைத் தயாரித்துள்ளார்கள்.

முக்கியமான நான்கு கோரிக்கையை அறிவிக்கக் கேட்டிருந்தார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். நான்கு இல்லாவிட்டாலும் ஏதாவது ஒன்றையாவது அறிவித்திருக்க வேண்டும். ஏதுமில்லை என்றால், பா.ஜ.க.வின் மனதில் தமிழ்நாடு இல்லை என்று பொருள். தமிழ்நாடு தேவையில்லை என்று பொருள். இதில் நாம் அதிர்ச்சியடைய ஏதுமில்லை. பா.ஜ.க.வின் நிறமும் குணமும் அதுதான் என்பது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும்.

நிதி அமைச்சராக நிர்மலா சீதாராமனை நியமித்ததும், நமக்கு ஒன்று புரிந்துவிட்டது, ‘இது வழக்கமான மோடி மாடல் ஆட்சிதான்’ என்று! எதிலும் மாற்றம் வரப் போவது இல்லை என்பதை உணர்த்தியது அந்த ஒரு நியமனம். ஏன் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டது, மற்ற பல மாநிலங்கள் இல்லை என்று கேட்டால், நிர்மலா என்ன பதில் சொல்லி இருக்கிறார் தெரியுமா?

“மாநிலங்களுக்கு ரூ.1.50 லட்சம் கோடியை வட்டியில்லாத கடனாகத் தந்திருக்கிறோமே, இது போதாதா?” என்கிறார் நிர்மலா சீதாராமன். வட்டிக் கடை நடத்துபவரை நிதி அமைச்சராகப் போட்டால் இப்படித்தான் இருக்கும். கூட்டாட்சித் தத்துவத்தின் எந்தக் கூறும் தெரியாத உணர விரும்பாதவர் கையில் நிதி அமைச்சகத்தின் பொறுப்பை ஏன் கொடுத்திருக்கிறார்கள் என்றால் இதுபோன்று இரக்கமற்றுச் செயல்படுவதற்காகத்தான்.

**“நாங்கள் மட்டும் தேர்தலில் ஜெயித்து வந்தால் பதவி. நிர்மலா சீதாராமன் போன்ற உயர் ஜாதிக்காரர்களுக்கு எப்போதும் பதவியா?” என்று தனது ஆற்றாமையை மாஜி பெண் ஆளுநர் தனது நண்பர்களிடம் வேதனையாக பகிர்ந்து கொண்டார். இது டெல்லி பா.ஜ.க. தலைமையின் காதுக்குப் போனது. அவரை பொதுமேடையில் வைத்து ஒன்றியத்தில் அதிகாரம் பொருந்திய அமைச்சர் கண்டிக்கிறார் என்றால் நிர்மலாக்கள் எதற்காகப் பதவிகளில் உட்கார வைக்கப்படுகிறார்கள் என்பதை நமது நெத்தியில் அடித்துச் சொல்கிறது இந்த நிதி அநீதி அறிக்கை.**

## மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்வு!

மேட்டூர், ஜூலை 25 –

கர்நாடகாவில் தென்மேற்கு பருவ மழை தீவிரமாக பெய்தது. இதன் காரணமாக அங்குள்ள கிருஷ்ண ராஜசாகர், கபினி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. இந்த 2 அணைகளும் நிரம்பியதை அடுத்து உபரிநீர்காவிரிஆற்றில்தமிழகத்திற்கு வினாடிக்கு 70ஆயிரம் கனஅடிக்கு மேல் திறக்கப்பட்டு வந்தது.

கர்நாடக அணைகளில் திறந்து விடப்பட்ட தண்ணீர் ஒகேனக்கல் வழியாகமேட்டூர்அணைக்குவந்துகொண்டிருக்கிறது. கடந்த 1 வார காலமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுவதால் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.07.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) விதிகளின்படி குழந்தை நலக் குழுவிற்கான தலைவர், உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் நீதி குழுமத்திற்கான சமூக பணி உறுப்பினர்களை நியமனம் செய்திட அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் செல்வி கே.பி.கே. வாசுகி சந்தித்துப் பேசினார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், குழுவின் உறுப்பினர்கள் செல்வி எல்.டி. ஸ்டெகனா ஜென்சி, ஏ.தேவநேயன், பேராசிரியர் டாக்டர் எம்.சீனிவாசன், ஜோசப் லியோ, உறுப்பினர் செயலர் அமர் குஷாவாகா ஆகியோர் உள்ளனர்.

## இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள

# தமிழ்நாட்டு மீனவர்கள் - மீன்பிடிப் படகுகளை மீட்டிட உடன் நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, ஜூலை 25-

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திடக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு 23.7.2024 அன்று கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் 22.7.2024 அன்று INDTN10MM2517 மற்றும் INDTN10MM284 பதிவு எண்கள் கொண்ட மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், அவர்களும், அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் தற்போது ஜூலை 22 ஆம் நாள் வரை மட்டும் 250 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதைத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், கடந்த 10 ஆண்டுகளில், ஒரு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மிக அதிகபட்ச எண்ணிக்கை இது என கவலையோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

மீனவர்கள் இதுபோன்று அச்சுறுத்தப்படுவதும், கைது செய்யப்படுவதும் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகள், கருவிகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து தடையின்றி நடைபெற்று வருவதாகவும், இதனால் மீனவ மக்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதையும் முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, இந்த நிலைமையைத் தணித்திட உரிய தூதரக முயற்சிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்றும், பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து இலங்கையிலிருந்து 87 மீனவர்களையும், 175 படகுகளையும் விரைவாக விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.








கழகத்தலைவர் – முதலமைச்சர் அவர்கள் அமைத்துள்ள, 2026 சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில், சட்டமன்றத் தொகுதி வாரியாகச் செயல்பட்டு வரும் தொகுதிப் பார்வையாளர்களை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை – ‘குறிஞ்சி’ இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை சந்தித்து உரையாடினார். தலைமைக் கழக முதன்மைச் செயலாளரும் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினருமான–அமைச்சர் கே.என்.நேரு, ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்கள் – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு மற்றும் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., எஸ்.ஆஸ்டின் ஆகியோர் மேடையில் உள்ளனர். இக்கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் – நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் கழகம் வெற்றி பெற சிறப்புறப் பணியாற்றிய 234 சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர்களுக்கும் தமது அன்பையும், நன்றியையும் தெரிவித்தார். மேலும் அவர் இது குறித்த தமது வலைதளப் பதிவில், **“மேலும், நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களையும் - சாதனைகளையும் பட்டிதொட்டியெங்கும் எடுத்துச் சென்று, 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத்துக்கு மாபெரும் வெற்றியை பெற்றுத் தருகிற வகையில் அயராது உழைப்போம்!”** என்று குறிப்பிட்டுள்ளார்.